தினமணி

## பணவீக்கத்தை கட்டுக்குள் வைப்பது அவசியம்: சி.ரங்கராஜன்

First Published : 02 Mar 2012 03:35:32 AM IST

புதுச்சேரி, மார்ச் 1: பணவீக்கத்தைக் கட்டுக்குள் வைப்பது அவசியம் என்று பிரதமரின் நிதி ஆலோசனைக்குழுத் தலைவர் சி.ரங்கராஜன் குறிப்பிட்டார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற இந்தியர்களின் பொருளாதாரச் சமூகம் எனும் கருத்தரங்கில் அவர் பேசியது:

நாட்டில் கடந்த இரு ஆண்டுகளில் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்குப் பணவீக்க விகிதம் அதிகரித்தது. குறிப்பாக 2009-10-ம் ஆண்டில் மோசமான வானிலை மற்றும் உணவு உற்பத்தியில் பின்னடைவால், மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட உணவுப் பணவீக்கம், உணவு தானியங்களின் விலையையும் உயர்த்தியது.

மார்ச் 2010-ல் 3.51 சதவீதமாக இருந்த பணவீக்க விகிதம் மார்ச் 2011-ல் 8.5 சதவீதமாக உயர்ந்தது. நடப்பு நிதியாண்டிலும், பணவீக்கம் தொடர்கிறது. ஏப்ரல் 2011 முதல் நவம்பர் 2011 வரையிலான 8 மாதங்களில் பணவீக்கம் 9 சதவீதமாக இருந்தது. டிசம்பர் 2011-ல் இது 7.5 சதவீதமாகவும், ஜனவரி 2012-ல் இது 6.5 சதவீதமாகவும் இருக்கிறது.

பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வு குறித்து முடிவெடுக்கும் போது, அது பணவீக்க விவகாரத்தில் நிச்சயம் எதிரொலிக்கக் கூடும். விலையேற்றத்தைக் கட்டுக்குள் வைப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டியது அவசியம்.

வளரும் நாடுகளில், வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களை இந்த பணவீக்கம் கடுமையாகப் பாதிக்கும்.

நிதி சார்ந்த காரணிகள் பணவீக்கத்தில் முக்கியப் பங்காற்றுகின்றன. நிதியைக் கையாளும் அதிகாரிகளுக்குப் பல்வேறு குறிக்கோள்கள் இருந்தாலும், அவர்களுக்குச் சரியான பாதையில், தெளிவான திட்டமிடல் இருப்பது அவசியம். குறிக்கோள்களை வரிசைப்படுத்துவதும் அவசியம் என்றார் ரங்கராஜன்.

சர்வதேசத் தரத்தினாலான அரங்கம்: புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெஏகே.தரீன் பேசுகையில், 12-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 3 ஆயிரம் பேர் அமரக்கூடிய அளவில், ரூ.50 கோடியில் சர்வதேச தரத்தினாலான அரங்கம் அமைக்கப்படும்.

இப்போதைக்கு, ரூ.80 லட்சம் செலவில், ஆண்டுக்கு 80 கருத்தரங்குகள் நடைபெறுகின்றன என்றார்.

## என்.எல்.சி: மண்வெட்டும் இயந்திரம் ரூ.4.70 கோடியில் புதுப்பிப்பு

First Published : 02 Mar 2012 09:23:41 AM IST

நெய்வேலி, மார்ச் 1: நெய்வேலி என்எல்சி நிறுவனத்தின் 2-ம் சுரங்கத்தில் மண்வெட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இயந்திரம் ரூ.4 கோடியே 70 லட்சம் செல்வில் புதுப்பிக்கப்பட்டது.

÷புதுப்பிக்கப்பட்ட இந்த இயந்திரத்தை என்எல்சி சுரங்கத்துறை இயக்குநர் பி.சுரேந்திரமோகன் புதன்கிழமை இயக்கி வைத்தார்.

÷என்எல்சி 2-ம் சுரங்கத்தில் மேல் மண் நீக்கத்துக்காக 1400 லிட்டர் திறனுடைய மண்வெட்டும் இயந்திரம் 1984-ம் ஆண்டு ரூ.200 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டது. இந்த இயந்திரம் கடந்த 28 ஆண்டுகளில் 1 லட்சத்து 4 ஆயிரத்து 637 மணிநேரம் இயங்கியுள்ளது.

÷இந்நிலையில் இயந்திரம் 2011-12-ம் ஆண்டில் புதுப்பிக்கும் பணிக்காக நிறுத்தப்பட்டு 4 மாதங்களில் ரூ.4 கோடியே 70 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

÷நிகழ்ச்சியில் நிறுவன சுரங்க இயக்குநர் பி.சுரேந்திரமோகன், சுரங்கத் தலைமைப் பொதுமேலாளர் குமாரசாமி, செயல் இயக்குநர் ஜி.ராமகிருஷ்ணன் முன்னிலையில் இயக்கிவைத்தார்.

## முல்லைப் பெரியாறில் புதிய அணை: கேரள ஆளுநர் உரையில் அறிவிப்பு

First Published : 02 Mar 2012 03:28:39 AM IST



திருவனந்தபுரம், மார்ச் 1: முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டப்படும் என்று கேரள சட்டப்பேரவையில் வியாழக்கிழமை ஆளுநர் உரையின்போது அறிவிக்கப்பட்டது.

கேரள மாநிலத்துக்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும் கூட்டத்தொடர் வியாழக்கிழமை தொடங்கியது.

சட்டப்பேரவையில் துவக்க உரை ஆற்றிய ஆளுநர் ஹெச்.ஆர்.பரத்வாஜ், "தமிழகத்துக்கு தண்ணீர்-கேரளத்துக்குப் பாதுகாப்பு' என்ற கொள்கையின் அடிப்படையில் முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டப்படும் என்று அறிவித்தார்.
உரையில் அவர் மேலும் தெரிவித்தது: "" முல்லைப் பெரியாறு தொடர்பாக தமிழகத்துடன் பல ஆண்டுகளாக பிரச்னை நிலவி வருகிறது. மே 2011-ல் பதவியேற்றது முதல் ஐக்கிய ஜனநாயக முன்னணி அரசுக்கு இந்தப் பிரச்னையே முதன்மையானதாக உள்ளது. இரு மாநிலங்களுக்கிடையேயான நல்லுறவை பாதுகாப்பதிலும், நீடிக்கச் செய்வதிலும் கேரளம் உறுதியுடன் உள்ளது. இந்தப் பிரச்னைக்கு சுமூகமான முறையில் தீர்வு அளிக்கப்பட்டால் அதை கேரளம் வரவேற்கும். முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவதில் கேரளம் உறுதியுடனும், ஒருமனதுடனும் உள்ளது. அணையின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏதேனும் ஏற்பட்டால் அதைச் சமாளிக்கும் வகையிலான திட்டத்தை "கேரள மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம்' வகுத்துள்ளது" என்றார்.
கேரள-இடுக்கி எல்லையில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணை கட்டப்பட்டு 116 ஆண்டுகள் ஆவதால் அது பலவீனமாக இருப்பதாகவும், அதனால் புதிய அணை ஒன்று கட்டப்பட வேண்டும் என்றும் கேரளம் கூறி வருகிறது. ஆனால் இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் தமிழகம், இப்போதுள்ள அணை வலுவான நிலையில் உள்ளதாகவும், குறிப்பிட்டக் கால இடைவெளிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் புதிய அணை கட்டுவதற்கானத் தேவை எழவில்லை என்றும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. தமிழகத்தில் 5 மாவட்டங்களின் நீர்ப்பாசனத்துக்கு முல்லைப் பெரியாறிலிருந்தே தண்ணீர் பெறப்படுகிறது.
இந்தப் பிரச்னை தொடர்பான வழக்கு இப்போது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அமைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட குழு முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்தும், ஏனைய அம்சங்கள் குறித்தும் ஆய்வு செய்து வருகிறது.

## நாற்று நடும் இயந்திர செயல்விளக்கப் பயிற்சி: விவசாயிகள் பங்கேற்கலாம்

First Published : 02 Mar 2012 09:03:30 AM IST

திருவள்ளூர், மார்ச் 1: நெல் நாற்று நடும் இயந்திரத்தின் செயல்பாடுகள் குறித்து திருவள்ளூர் மாவட்டம், திரூரில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கு செயல்விளக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் நெற்பயிர் சாகுபடி முக்கிய இடம் வகிக்கிறது. மேலும் தற்போது விவசாய பணிக்கு ஆள்கள் கிடைப்பது அரிதாகி விட்டது.

இதனால் நெல் நாற்று நடுவதற்கு கூட பணியாளர்கள் கிடைக்காமல் விவசாயிகள் மிகுந்த பாதிப்படைந்துள்ளனர். இதைக்கருத்தில் கொண்டு தமிழக அரசு, வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு நெல் நாற்று நடவு இயந்திரங்களை தருவித்து குறைந்த வாடகையில் அவர்கள் அதை பயன்படுத்த ஏற்பாடு செய்துள்ளது.

விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயத்துக்கான ஆள் பற்றாக்குறையை போக்கி, விவசாயத்தொழில் நலிவடையாமல் பாதுகாக்கவும் இயந்திர நடவு முறை மேற்கொள்ளப்படுகிறது. இந்த இயந்திரம் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப ரூ. 1.5 லட்சம் முதல் ரூ. 12 லட்சம் வரை விலையில் கிடைக்கிறது.

இந்த நடவு இயந்திரத்தை எப்படி பயன்படுத்துவது, அதற்கான நாற்றுக்களை எப்படி தயாரிப்பது, என்பன உள்ளிட்ட விவரங்கள் குறித்து திரூர் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு செயல்விளக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதுகுறித்து வேளாண் ஆராய்ச்சி நிலையத் தலைவர் பேராசிரியர் தேவநாதன் கூறியது:

முதல் கட்டமாக எல்லாபுரம் ஒன்றியம் வடமதுரை கிராமத்தில் விவசாயிகளுக்கு நெல் நாற்று நடும் இயந்திரம் குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக 100 ஏக்கரில் நெல் நாற்று நடுவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. சிறு, குறு விவசாயிகள் திரூர் வேளாண்மை அறிவியல் மையத்துக்கு நேரில் வந்து பயிற்சி பெறலாம் என்றார் தேவநாதன்.

## சொட்டுநீர்ப் பாசனத்துக்கு மானியம்: விவசாயிகளுக்கு அழைப்பு

First Published : 01 Mar 2012 02:02:20 PM IST

கரூர், பிப். 29: தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்ய விரும்பும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சத மானியத்திலும், 75 சத மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க அரசு உதவுகிறது. இதுகுறித்த விவரங்களை அறிந்துகொள்ள விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர்களை செல்போனில் தொடர்புகொள்ளலாம்.

கரூர் மாவட்ட தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் வெ. சதாசிவம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டத்திலுள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியத்தில் அதிகபட்சமாக 5 ஹெக்டேர் வரை நுண்ணீர் பாசனத் திட்டத்தில் பயன் அடையலாம்.

கணினி சிட்டா, அடங்கல், நில வரைபடம், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவுள்ள 4 புகைப்படங்கள், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று ஆகிய ஆவணங்களுடன் தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

இதுகுறித்த விவரங்களை அறிந்துகொள்ள கரூர் மற்றும் அரவக்குறிச்சி வட்டார விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜி. வளர்மதி என்பவரை 9444161874 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். தாந்தோணி மற்றும் க. பரமத்தி வட்டார விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர் சொர்ணமாணிக்கம் என்பவரை 9994775748 என்ற செல்போன் எண்ணிலும் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்துகொள்ளலாம்.

கிருஷ்ணராயபுரம் வட்டார விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர் கே. ராஜேந்திரன் என்பவரை 8973242300 என்ற செல்போன் எண்ணிலும், குளித்தலை வட்டார விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர் டி.எம். விஜயகுமார் என்பவரை 9842429385 என்ற செல்போன் எண்ணிலும், தோகைமலை வட்டார விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர் எஸ். சிந்தாமணி என்பவரை 9443456111 என்ற செல்போன் எண்ணிலும், கடவூர் வட்டார விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர் எம். வீரமணி என்பவரை 9443001309 என்ற செல்போன் எண்ணிலும் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்துகொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## பல்லடம் புடலை விதைக்கு ஆந்திரா, கர்நாடகாவில் "கிராக்கி'

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2012,00:03 IST

கருத்தை பதிவு செய்ய

பல்லடம் : ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில், பல்லடம் பகுதி புடலை விதைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

பல்லடம் பகுதியில் கேத்தனூர், கரடிவாவி, செலக்கரிச்சல், பாப்பம்பட்டி, ஜல்லிப்பட்டி, கொடுவாய், பச்சார்பாளையம், புள்ளியப்பம் பாளையம், பூராண்டம்பாளையம் உட்பட பல இடங்களில் 800 ஏக்கர்

பரப்பளவில் புடலை சாகுபடி செய்யப்படுகிறது.

இவை, திருப்பூர், கோவை, ஒட்டன்சத்திரம், தாராபுரம் மற்றும் கேரள பகுதிகளில் உள்ள

மார்க்கெட்டு

களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. சாகுபடி செய்த 65 நாட்களில் இருந்து தொடர்ந்து இரண்டு மாதங்கள் புடலங்காய் மகசூல் கொடுக்கிறது.

பல்லடம் பகுதியில் குட்டைவரி புடலை மிக அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. நன்கு பழுத்த புடலங்காயில் இருந்து விதைகளை எடுத்து, தேய்த்து, மேல் தோலை நீக்கி, சுமாரான வெப்பத்தில் மூன்று முதல் நான்கு நாட்கள் காய வைத்து விதைகளாக தயார் செய்கின்றனர்.

இரண்டு மாதங்களுக்கு முன், தரமான ஒரு கிலோ புடலங்காய் விதைக்கு 900 ரூபாய் விலை கிடைத்தது. தற்போது, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திராவில், பல்லடம் குட்டை வரி புடலை விதைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அங்கு ரூ.1,200க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதன் காரணமாக, பல்லடம் பகுதியில் புடலை விதைகள் இருப்பு வைத்துள்ள விவசாயிகள், வியாபாரிகள் மூலம் வெளிமாநிலங்களில் விதைகளை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

## நெல் விதை பண்ணைகளில் ஆய்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2012,00:02 IST

கருத்தை பதிவு செய்ய

உடுமலை : மடத்துக்குளம் பகுதியில் விதை சான்று துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரசு நெல் விதைப்பண்ணைகளை விதை சான்று உதவி இயக்குனர் ஆய்வு செய்தார்.

நடப்பு சம்பா பருவத்தில் மடத்துக்குளம் தாலுகாவில் விதை சான்று துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள ஆதாரம் மற்றும் சான்று நிலை நெல் விதைப்பண்ணைகளில் கதிர்கள் முதிர்ச்சி பருவத்தில் உள்ளன.

பாப்பன்குளம், செங்கழனிபுதூர், நீலம்பூர், போத்தநாயக்கனூர், வேடபட்டி, நரசிங்காபுரம் ஆகிய கிராமங்களில் அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களால் அமைக்கப்பட்டுள்ள விதைப்பண்ணைகளை விதை சான்று உதவி இயக்குனர் மோகன்ராஜ்சாமுவேல் ஆய்வு செய்தார். அவர் கூறியதாவது:

அரசு விதைப்பண்ணையில் திருந்திய நெல் சாகுபடி முறையில் அமைக்கப்பட்டுள்ள ஏடிடி., 43, ஏடிடி(ஆர்)45 மற்றும் ஏடிடி 39 ஆதார நிலை விதைப்பண்ணைகளில் வயல்தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு கலவன் பயிர்களை முழுவதுமாக நீக்கம் செய்திட உற்பத்தியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

அரசு விதை சுத்திகரிப்பு நிலையத்தில் சான்று நடைமுறைகளின்படி உரிய காலத்தில் சுத்திகரிப்பு மற்றும் சான்று பணிகளை மேற்கொள்ள விதை சான்று அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது.

தனியார் விதை பண்ணைகளில் விதை வயல்களில் காணப்படும் களைகளை முழுமையாக நீக்கி ஒருங்கிணைந்த முறையில் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த வேண்டும்.
நெற்பயிரில் குறைந்தபட்சம் 80 சதவீதம் முளைப்பு திறனும் 98 சதவீதம் புறத்தூய்மையும், 13 சதவீதம் ஈரப்பதமும் கொண்ட விதைக்குவியல்களுக்கு விதை சான்று அலுவலர்களால் சான்று வழங்கப்படுகிறது. இவ்வாறு, பிற ரக கலப்பு இல்லாத விதைகளே அதிக மகசூலுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. இவ்வாறு விதை சான்று உதவி இயக்குனர்
கூறினார். விதை சான்று அலுவலர்கள் மகாலிங்கம், உதயகுமார் அன்னூர் விதை சான்று அலுவலர் சுந்தரவடிவேலு உடனிருந்தனர்.

## சோயா மொச்சையில் புதிய ரகம் திருச்சி பாரதிதாசன் பல்கலை விதை நிறுவனம் ஒப்பந்தம்

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2012,01:24 IST

கருத்தை பதிவு செய்ய

திருச்சி: சோயா மொச்சையில் புதிய வகை அறியும் ஆய்வுக்காக பாரதிதாசன் பல்கலை, மஹாராஷ்டிரா விதை நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.
பாரதிதாசன் பல்கலை தாவரமூலக்கூறு உயிரியியல் துறை பேராசிரியர்கள் கணபதி, மாணிக்கவாசகம் ஆகியோர் சோயாமொச்சையில் பயிரில் திசு வளர்ப்பு மூலம் ஜீன்களை உட்செலுத்தி ஆய்வு செய்தனர்.
ஆய்வில், விட்டமின் "இ' அதிகளவில் உற்பத்தி செய்யும் புதிய சோயா மொச்சையை உண்டாக்கியுள்ளனர்.
இது இந்தியாவில் மிக முக்கிய கண்டுபிடிப்பாக கருதப்படுகிறது. இதை மேலும் பயனுள்ளதாக்கும் வகையில், நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட சோயா மொச்சை வகையை உருவாக்க, மஹாராஷ்டிரா மாநிலம் ஜால்னா நகரில் உள்ள "பிஜோ சீத்தல்' என்ற விதை ஆராய்ச்சி நிறுவனம், பாரதிதாசன் பல்கலை பேராசிரியர்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.
அதன்படி ஆய்வின் முதல் கட்டமாக 7.5 லட்சம் ரூபாய் நிதியை பிஜோ சீத்தல் விதை நிறுவனம் வழங்குகிறது.
இதையடுத்து, மத்திய உயிர் தொழில் நுட்பத்துறை மூலம் பாரதிதாசன் பல்கலை மற்றும் பிஜோசீத்தல் விதை நிறுவனம் ஆகியவை பூச்சி, நோய் எதிர்ப்பு திறன் கொண்ட சோயா மொச்சை விதைகளை உற்பத்தி செய்ய உள்ளனர்.இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் பாரதிதாசன் பல்கலை துணைவேந்தர் மீனா முன்னிலையில், பிஜோ சீத்தல் நிறுவன மூத்த விஞ்ஞானி நந்தகுமார் குஞ்சே கையெழுத்திட்டார்.

## நுண்ணீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2012,01:17 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: "சிறு, குறு விவசாயிகள் நுண்ணீர் பாசனம் அமைக்க மான்யம் பெற விண்ணப்பிக்கலாம்' என கரூர் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் சதாசிவம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:கரூர் மாவட்டத்திலுள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு அதிகப்பட்சமாக ஏக்கருக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில், அதிகப்பட்சமாக ஐந்து ஹெக்டர் வரை, நுண்ணீர் பாசனத்திட்டத்தில் பயன் அடையலாம். மேலும், நுண்ணீர் பாசனம் அமைக்க தாசில்தாரால் வழங்கப்படும் கம்ப்யூட்டர் சிட்டா -1, வி.ஏ.ஓ.,வால் வழங்கப்படும் அடங்கல் மற்றும் புல வரைப்படம் தலா -1, ரேஷன் கார்டு நகல் 1, பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ 4, தாசில்தாரால் வழங்கப்படும் சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று, ஆகிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரை நேரிலோ அல்லது கீழ்கண்ட மொபைல் ஃபோன் எண்ணிலோ தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.கரூர் மற்றும் அரவக்குறிச்சி- வளர்மதி 94441-61874, தாந்தோணி மற்றும் க.பரமத்தி- சொர்ணமாணிக்கம் 99947-75748, கிருஷ்ணராயபுரம்- ராஜேந்திரன் 89732-42300, குளித்தலை- விஜயகுமார் 98424-29385, தோகமலை- சிந்தாமணி 94434-56111, கடவூர்- வீரமணி 94430-01309 என்ற எண்களில் தொடர்பு கொண்டு நுண்ணீர் பாசனம் திட்டம் தொடர்பாக விவசாயிகள் கேட்டு பயன்பெறலாம்.

## கொள்முதல் மையங்களை கண்காணிக்க குழுக்கள்

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2012,01:24 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை : நெல் கொள்முதல் மையங்களில் முறைகேடு நடப்பதை தடுக்க அதிகாரிகள், விவசாயிகள் இணைந்த கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் சம்பா பருவ நெல்லை கொள்முதல் செய்ய நுகர்பொருள் வாணிப கழகம், கூட்டுறவு துறை மூலம் நெல் கொள்முதல் மையங்களை அமைத்துள்ளன. இவற்றை கண்காணிக்க விவசாயிகள், அதிகாரிகளை கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மதுரை தெற்கு தாலுகாவில் மாவட்ட வழங்கல் அலுவலர் சுந்தரேசன் (94450 00335) தலைமையிலும், வடக்கு தாலுகாவில் ஆர்.டி.ஓ., துரைராஜ் (94450 00449) தலைமையிலும்,

மேலூர் தாலுகாவில் கலால்துறை உதவி கமிஷனர் ரவீந்திரன் (0452- 253 1718) தலைமையிலும், வாடிப்பட்டி தாலுகாவில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் காமாட்சிகணேசன் (0452- 252 9054) தலைமையிலும், உசிலம்பட்டி தாலுகாவில் உசிலம்பட்டி ஆர்.டி.ஓ., புகழேந்தி (94450 00450) தலைமையிலும், திருமங்கலம் தாலுகாவில் நிலச்சீர்திருத்த உதவி கமிஷனர் (0452- 253 8391) தலைமையிலும், பேரையூர் தாலுகாவில் மாவட்ட ஆதிதிராவிடர் நலஅலுவலர் (0452- 253 6070) தலைமையிலும் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
விவசாயிகள் நெல் தவிர, வியாபாரிகளின் நெல் கொள்முதல் செய்யப்பட்டால் அவற்றை பறிமுதல் செய்யலாம். அம்மையத்தை கறுப்பு பட்டியலில் சேர்க்கலாம். புகார்கள் இருப்பின் மேற்கண்ட போன்களில் தெரிவிக்கலாம், என கலெக்டர் சகாயம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**உப்பிடமங்கலத்தில் வேளாண் பயிலரங்கம்**


பதிவு செய்த நாள் : மார்ச் 02,2012,01:16 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: தமிழக வேளாண்மை பொறியியல் துறை சார்பில், குடகனாறு நீர்த்தேக்க திட்டம், பாசனப்பகுதி மேன்மை மற்றும் நீர் மேலாண்மைத் திட்டப் பயிலரங்கம் உப்பிடமங்கலத்தில் நடந்தது. பயிலரங்கில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கான்கிரீட் வாய்க்கால்களும், சுழற்சி முறை பாசனத்திட்டத்தின் கீழ், பிரிவு தொட்டிகளும், வண்டித்தடப் பாலங்களும் கட்டித் தரப்பட்டுள்ளது குறித்தும், கட்டி தந்த வாய்க்கால்களைப் பராமரிப்பதற்காக பாசன சங்கங்கள் அமைக்கப்பட்டு, தமிழக அரசு மூலம் மேலாண்மை மானியமாக ஹெக்டருக்கு 900 ரூபாய் வீதம் வழங்கப்பட்டது குறித்தும் விளக்கள் அளிக்கப்பட்டது. மேலும், பயிலரங்கில் சொட்டு நீர் பாசனம் மற்றும் பண்ணைக் கருவிகள் குறித்த செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது.
கரூர் மாவட்ட கலெக்டர் நேர்முக உதவியாளர் (விவசாயம்) விஜயகுமார், மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் சங்கரன், அரவக்குறிச்சி உதவி செயற்பொறியாளர் சின்னசாமி, வீரராக்கியம் ஏரி பாசனசபை பொருளாளர் ராமசாமி, உப்பிடமங்கலம் ஏரி பாசன சபை தலைவர் மகாலிங்கம், வெள்ளியணை ஏரி பாசன சபை தலைவர் ராமநாதன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## சென்னையில் முட்டை விலை உயர்வு

மார்ச் 01,2012,10:20



சென்னை : பனிப்பொழிவு வடமாநிலங்களில் நீடிப்பதால் கோழி முட்டைகளின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் சென்னையில் முட்டை விலை அதிகரித்துள்ளது.
தமிழகத்தில் 3 கோடி கோழி முட்டைகள் நாளொன்றுக்கு சராசரியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் சென்னையில் மட்டும் 55 முதல் 60 லட்சம் வரை விற்கப்படுகின்றன. தமிழக முட்டை ஆந்திரா, டில்லி, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், காஷ்மீர், அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.
தமிழகத்தில் புரட்டாசி மாதம், சபரிமலை சீசன் போன்ற காரணங்களால் முட்டைகள் விற்பனை சற்று மந்தமடையும் போது, வட மாநிலங்களில் கோழி முட்டைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். அதே போல வடமாநிலங்களில் வெயில் காலங்களில் முட்டை விற்பனை சற்று மந்தமடையும் சமயங்களில் தமிழகத்தில் முட்டைக்கான தேவை அதிகமாகும்.
இதனால் தமிழகத்தில் உற்பத்தியும், விற்பனையும் சம நிலையில் காணப்படுகிறது.
பனிப்பொழிவு குறையவில்லை வடமாநிலங்களில் பிப்ரவரியில் பனிப்பொழிவு குறைய ஆரம்பித்து வெயில் தீவிரமாகும். அதனால் அந்த காலத்தில் முட்டை தேவை குறைவாக இருக்கும்.ஆனால் இந்த வருடம் பிப்ரவரி மாதத்திலும் பனிப்பொழிவுக் குறையவில்லை. இப்போதும் பனி பெய்து வருவதால் கோழி முட்டைக்கு அங்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் 10 முதல் 15 சதவீதம் வரை கூடுதலாக வட மாநிலங்களுக்கு முட்டை அனுப்பப்படுகிறது.

இந்நிலையில் தமிழகத்தில் முட்டைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. பொதுவாக முட்டைகள் உற்பத்தியில் தேக்கமடையும் போது, அவை விலை குறைந்தும், தேவை அதிகளவில் இருக்கும் போது விலை அதிகரித்தும் காணப்படும். தற்போது முட்டைகளுக்கு வட மாநிலங்களில் வரவேற்புள்ளதால் தமிழகத்தில் அவற்றின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால் கடந்த

சில நாட்களுக்கு முன்பு வரை மொத்த விற்பனை நிலையங்களில் சாதாரணமாக 2.50 ரூபாய் வரையிலும், சில்லறைக் கடைகளில் 2.75 ரூபாய் வரை விற்பனையாகிக் கொண்டிருந்தன. தற்போது முட்டை மொத்த விற்பனைக் கடைகளில் ரூ.2.92 வரையிலும் சில்லறைக் கடைகளில் ரூ.3.25 வரை விலையுள்ளது. தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் கழக தென் மண்டல தலைவர் மோகனரெட்டி கூறும் போது, 'மார்ச் மாதம் தொடங்கிய பின்னர் தான் முட்டை விலை மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதனால் இன்னும் சில நாட்களுக்கு, இந்த நிலை தான் காணப்படும்' என்றார்.

## வேளாண் பல்கலையில் பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2012,23:31 IST

கருத்தை பதிவு செய்ய

சென்னை :தமிழ்நாடு வேளாண் பல்கலை பயிற்சி மையம் சார்பில் ஜூஸ், மற்றும் ஊறுகாய் தயாரிக்க, வரும் 6ம் தேதி, ஒருநாள் பயிற்சி அளிக்கிறது.

அன்று காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடக்கும் இப்பயிற்சியில் பங்கேற்போருக்கு, குறிப்பேடு, கையேடு, மதிய உணவு மற்றும் சான்றிதழ் தரப்படும். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், பயிற்சிக் கட்டணம் உள்ளிட்ட விவரங்களை, 2626 3484 என்ற தொலைபேசி எண்ணில் பெறலாம்.

## வரத்து குறைவால் வாழைத்தார் விலை அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2012,23:39 IST

பொள்ளாச்சி : தூத்துக்குடியிலிருந்து வாழைத்தார் வரத்து குறைந்துள்ளதால், கடந்த வாரத்தை விட இந்த வாரம் வாழைத்தார் ஒன்றுக்கு 40 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது. பொள்ளாச்சி சந்தைக்கு சீசன் நேரங்களில் மூவாயிரம் வாழைத்தார் வரை வரத்தாக இருக்கும். அப்போது விலையும் சரிந்திருக்கும். ஆனால், தற்போது சீசன் இருந்தாலும் தூத்துக்குடி பகுதியிலுள்ள வெயில், இரவு நேரத்தில் பனி பொழிவு காரணமாக வரத்து பாதியாக குறைந்துள்ளது. சந்தைக்கு இந்த வாரம் ஆயிரத்து 500 வாழைத்தார் மட்டும் வரத்தாக உள்ளது. இதில், கேரளாவுக்கு 800 வாழைத்தார் விற்பனைக்காக அனுப்பப்

படுகிறது. வரத்து குறைந்துள்ளதால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் வாழைத்தார் ஒன்றுக்கு 40 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.

நேற்றைய மார்க்கெட் நிலவரம் (தார் ஒன்றுக்கு): பூவன் - 150 - 250, மோரிஸ் - 250 - 350, செவ்வாழை - 200 - 400, ரஸ்தாளி - 200 -300, நேந்திரம் (கிலோவுக்கு) - 18 - 22, கற்பூரவல்லி - 250 - 450, "ராணி' பூவன்
(கிலோவுக்கு) - 28 என விலை போனது.
பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் வியாபாரி கிருஷ்ணகுமார் கூறுகையில், ""சீசன் இருந்தாலும், வரத்து இல்லாததால் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. இன்னும் இரண்டு மாதங்களுக்கு வரத்து அதிகரிக்க வாய்ப்பில்லை. வரத்து குறைந்தால், விலை மேலும் உயரும். வரத்து குறைவதால், கேரள வியாபாரி களின் வருகையும் குறைந்துள்ளது'' என்றார்.

**புளி விளைச்சல் அதிகரித்தும் விலை குறைவால் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2012,23:14 IST

போடி : மாவட்டத்தில் புளி விளைச்சல் கடந்த ஆண்டை விட அதிகரித்திருந்தாலும், விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மரங்களில் இருந்து பறிக்க தயக்கம் காட்டி வருகின்றனர்.
போடி, சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் புளி விளைச்சல் உள்ளது. இங்கிருந்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை சீசன் இருக்கும். கடந்த ஆண்டு அறுவடை நேரத்தில் மழை பெய்ததால் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் குவிண்டால் 3 ஆயிரம் முதல் 3 ஆயிரத்து 250 வரை இருந்தது. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு வரை குவிண்டால் 2 ஆயிரத்தி 500 வரை இருந்தது. சில்லரையில் 40 முதல் 50 ரூபாய் வரை விற்றது. இந்த ஆண்டு விளைச்சல் அதிகரித்துள்ளதால்,தற்போது குவிண்டால் 900 ரூபாய் முதல் ஆயிரத்தி 100 வரை விலை போகிறது. சில்லரையில் கிலோ 110 முதல் 120 ரூபாய் வரை விற்கிறது. புளி விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில் இந்த ஆண்டு புளி விலை கடும் சரிவை ஏற்படுத்தியுள்ளது.
புளியை அதிகளவில் வாங்கி இருப்பு வைக்க முடியாததால் கொள்முதல் செய்யவும் மொத்த வியாபாரிகள் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் பறிக்காமல் மரத்தில் விட்டுள்ளனர்.

---

தினகரன்

## மாசு கட்டுப்பாட்டு கூட்டம் விவசாயிகள் புறக்கணிப்பு

***கருத்துகள்***

பதிவு செய்த நேரம்:2012-03-01 12:44:00

திருச்செங்கோடு: திருச்செங்கோட்டில் வருவாய் கோட்டாட்சியர் கவிதா தலைமையில் நேற்று மாசு கட்டுப்பாட்டு குறைதீர் கூட்டம் நடந்தது. ஆனால் கூட்டத்திற்கு மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் வரவில்லை. இங்கு இதுவரை 4 மாசு கட்டுப்பாட்டு குறைதீர் கூட்டம் நடந்தும் அதில் தெரிவிக்கப்பட்ட புகார்கள் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை எனக்கூறி விவசாயிகள் மற்றும் மக்களும் நேற்றைய கூட்டத்தை புறக்கணித்தனர். 2 பேர் மட்டுமே கூட்டத்தில் பங்கேற்றனர்.

இவர்களில் விவசாயி நடேசன், தனது விவசாய கிணற்றில் சாயப்பட்டறைகளின் கழிவுகள் கலப்பதாக கூறி அந்த தண்ணீரை பாட்டிலில் கொண்டு வந்து கோட்டாட்சியரிடம் அளித்தார். இதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

இதுகுறித்து வருவாய் கோட்டாட்சியர் கவிதா கூறுகையில், ``திருச்செங்கோடு வட்டாரத்தில் விவசாய நிலங்களில் கள்ளத்தனமாக நடத்தப்படும் சாயப்பட்டறைகள் குறித்து மக்கள் தகவல் கொடுக்கலாம். அவர்கள் பெயர் ரகசியமாக வைக்கப்படும். அனுமதியின்றி சாயப்பட்டறை நடத்துபவர் மீது மட்டு மல்லாமல் சாயப்பட்டறை நடத்த இடம் கொடுப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்`` என்றார்.

## மரக்கன்று நடும் விழா

பதிவு செய்த நேரம்:2012-03-01 12:14:20

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் அருகே உள்ள செங்குடி புனித மிக்கேல் மேல்நிலைப்பள்ளியில் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு மரக்கன்று

நடும்விழா நடைபெற்றது. விழாவிற்கு ஒன்றிய கவுன்சிலர் மணிமாறன் தலைமை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் செல்வ ராணி முன்னிலை

வகித் தார். பள்ளி வளாகத்தைச் சுற்றிலும் மரக்கன்றுகள் நடப்பட்டு மாணவ, மாணவிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. மரம் வளர்ப்பது குறித்து

மாணவ, மாணவிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகை யில் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை ஒன்றிய

தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் கருணாகரன் உட்பட ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

---

## *எதிர்வரும் 2012–13–ஆம் நிதி ஆண்டுக்கு உர மானியம் குறைக்கப்பட்டது*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*எதிர்வரும் 2012–13–ஆம் நிதி ஆண்டுக்கு, டீ.ஏ.பி. மற்றும் எம்.ஓ.பி. ஆகிய யூரியா அல்லாத உரங்களுக்கான மானியங்கள் முறையே டன் ஒன்றுக்கு 27.4 சதவீதம் மற்றும் 10 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு டன் டீ.ஏ.பி.க்கான மானியம் ரூ.14,350–ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, நடப்பு நிதி ஆண்டில் ரூ.19,763–ஆக உள்ளது. இதே போன்று எம்.ஓ.பி.க்கான மானியம் டன் ஒன்றுக்கு ரூ.16,054 என்ற அளவிலிருந்து ரூ.14,440–ஆக குறைக்கப்பட்டுள்ளது.*
*ஏப்ரல் 1 முதல்...*
*மத்திய உர அமைச்சகத்தின் கோரிக்கையின்படி, ஒரு கிலோ நைட்ரஜன் உரத்திற்கு ரூ.24–ம், பாஸ்பேட் உரத்திற்கு ரூ.21.80–ம், பொட்டாஷ் உரத்திற்கு ரூ.24–ம், கந்தகத்திற்கு ரூ.1.67–ம் மானியம் வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த புதிய சத்து சார்ந்த மானிய விகிதங்கள் 2012 ஏப்ரல் 1–ந் தேதியிலிருந்து அமலுக்கு வருகின்றன.*
*சர்வதேச சந்தையில் உரங்கள் விலை குறைந்ததாலும், ரூபாயின் வெளிமதிப்பு அதிகரித்து வருவதாலும் யூரியா அல்லாத உரங்களுக்கான மானியம் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதனால் அடுத்த நிதி ஆண்டில் மத்திய அரசின் உர மானிய சுமை 20 சதவீதத்திற்கு மேல் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் யூரியா அல்லாத உரங்கள் பயன்பாட்டைப் பொறுத்தே அவற்றுக்கான மொத்த உர மானிய செலவினம் இருக்கும்.*
*மத்திய உரத் துறை அமைச்சகம் 2010 ஏப்ரல் 1–ந் தேதியிலிருந்து யூரியா அல்லாத உரங்களைப் பொறுத்தவரை சத்து சார்ந்த மானியக் கொள்கையை அமல்படுத்தி வருகிறது.*
*இக்கொள்கையின்படி ஒரு நிதி ஆண்டு தொடங்குவதற்கு முன் பல்வேறு உரங்களுக்கு சத்து சார்ந்த மானிய விகிதங்கள் அறிவிக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு அடக்க விலைக்கும் குறைவான விலையில் உரங்கள் கிடைக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.*